# "தேசத்தை வெற்றிகொள்ளும் குழந்தைகள்"

## வெளிநாடுகளில் சேவை புரியும் இலங்கையர்களின் இந்நாட்டில் வசிக்கும் பிள்ளைகள் வெளிப்படுத்தும் ஆற்றல்கள் மற்றும் திறன்களை மதிப்பிடுதல்.

## போட்டி விதிமுறைகள் மற்றும் அறிவுறுத்தல்கள்

### பொதுவான போட்டி விதிமுறைகள் மற்றும் அறிவுறுத்தல்கள்

- இப் போட்டிகளில் தங்களது தாய் அல்லது தந்தை அல்லது தாய் மற்றும் தந்தை ஆகிய இருவரும் அல்லது வெளிநாடுகளில் சேவை புரிந்துவிட்டு இலங்கையில் வசிக்கும், முன்பிள்ளைப் பருவம் (முன்பள்ளி மற்றும் 5 வயதுக்குக் கீழ்) அல்லது பாடசாலை வயதில் (தரம் 13 அல்லது அதற்குக் கீழ்) கற்கும் மாணவர்கள் மாத்திரம் பங்குகொள்ள முடியும்.

- 6 பிரதான வயது மட்ட குழுக்களின் மற்றும் 4 பிரதான போட்டிப் பிரிவுகளின் கீழ் இப்போட்டிகள் நடைபெறும். ஒவ்வொரு வயது மட்ட குழுக்களின் கீழ் போட்டியாளர்களுக்கான போட்டிச் சந்தர்ப்பங்கள் உரித்தாகும் விதம் பின்வருமாறு:

| வயது மட்ட குழு (31.12.2022 இல் படிக்கும் தரத்தின்படி) | சித்திரம் | பாடல் | நடனம் | கட்டுரை | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | சிங்களம் | ஆங்கிலம் | தமிழ் |
| முன்பள்ளி மற்றும் 5 வயதிற்குக் கீழ் | √ | √ | √ | | | |
| தரம் 1 மற்றும் 2 | √ | √ | √ | | | |
| தரம் 3 தொடக்கம் 5 வரை | √ | √ | √ | √ | √ | √ |
| தரம் 6 தொடக்கம் 8 வரை | √ | √ | √ | √ | √ | √ |
| தரம் 9 தொடக்கம் 11 வரை | √ | √ | √ | √ | √ | √ |
| தரம் 12 மற்றும் 13 | √ | √ | √ | √ | √ | √ |

- கட்டுரைப் போட்டிகள் **மாத்திரம்** சிங்களம், ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழிகளுக்காகத் தனித்தனியே உப போட்டிப் பிரிவுகளின் கீழ் போட்டியிடுவதற்காக சந்தர்ப்பங்கள் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

- கட்டுரைப் போட்டிகள், முன்பள்ளி மற்றும் 5 வயதுக்குக் குறைந்த குழு மற்றும் தரம் 1 மற்றும் 2 குழுக்களுக்கு நடாத்தப்பட மாட்டாது என்பதுடன், ஏனைய அனைத்துப் போட்டிகளும் அனைத்து வயது மட்ட குழுக்களின் கீழும் நடாத்தப்படும்.

- பாடல் போட்டிகள் சிங்களம், ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழிகளுக்காகத் தனித்தனியே உப போட்டிப் பிரிவுகளின் கீழ் ஏற்பாடு **செய்யப்பட மாட்டாது** என்பதுடன், மொழியைக் கவனத்திற் கொள்ளாது சகல ஆக்கங்களும் ஒரே பிரிவின் கீழ் கருத்திற் கொள்ளப்படும்.

- ஒரு போட்டியாளருக்குத் தனது வயது மட்ட குழுவின் கீழ் ஒன்றுக்கு மேற்பட்ட போட்டிப் பிரிவு.ஃ. சந்தர்ப்பங்களில் பங்குபற்ற முடியும்.

- நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ எந்தவொரு இனத்துக்கு அல்லது பிரதேசத்திற்கு கேடு விளைவிக்கும் அல்லது அரசியல் ரீதியாக பக்கச் சார்பாக விடயங்களைத் தூண்டுதல் அல்லது அரசியல் ரீதியாக மற்றும் சமூக ரீதியில் தூண்டுதல்களை வெளிப்படுத்தும் வகையில் ஆக்கங்களை முன்வைப்பது முழுமையாக தடைசெய்யப்பட்டுள்ளது என்பதுடன் அதுபோன்ற படைப்புகள் எவையும் கவனத்திற் கொள்ளப்படாது போட்டியிலிருந்து நீக்கப்படுதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

- மேற்படி வயது மட்ட பிரிவுகளின் கீழ் நடைபெறும் சகல போட்டிச் சந்தர்ப்பங்களின் போதும் பின்வரும் அடிப்படையில் தேசிய மட்டம் மற்றும் மாவட்ட மட்டத்தில் வெற்றிச் சந்தர்ப்பங்கள் கிடைக்கப்பெறும்.
    - தேசிய மட்டத்திலான வெற்றியாளர்கள்
        - முதலாம் இடம்
        - இரண்டாம் இடம்
        - மூன்றாம் இடம்
    - மாவட்ட மட்டத்திலான வெற்றியாளர்கள்
        - முதலாம் இடம்
        - இரண்டாம் இடம்
        - மூன்றாம் இடம

- நிலவும் COVID 19 நிலைமைகளின் கீழ் சகல போட்டி மாணவ மாணவிகளையும் கூட்டாக இணைக்காத வகையில் ஏற்பாடு செய்வதோடு, அதன்படி சகல ஆக்கங்களும் ஒவ்வொரு போட்டிப் பிரிவுகளுக்கமைவாக கீழே வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய ஹற்றன் நஷனல் வங்கிக்கு அனுப்புதல் வேண்டும்.
    - சித்திரப் போட்டி மற்றும் கட்டுரைப் போட்டி
        - போட்டி விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அமைவாக முழுமைப்படுத்தப்பட்ட ஆக்கங்கள் மற்றும் முறையாக பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவம் ("இணைப்பு 2") ஆகிய இரண்டையும் ஒன்றாக இணைத்து அருகில் அமைந்திருக்கும் ஹற்றன் நஷனல் வங்கிக் கிளையில் ஒப்படைத்தல் வேண்டும்.
        - அல்லாதவிடத்து பின்வரும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும்.<br>உதவி பொது மேலாளர் - கிளை அமைப்பு முகாமையாளர் மற்றும் வியாபார மேம்பாடு<br>வியாபார மேம்பாட்டுப் பிரிவு, 19 ஆம் மாடி, இலக்கம் 479, HNB பிரதான காரியாலயம்,<br>வு.டீ ஜாயா மாவத்தை, கொழும்பு 10
    - பாடல் போட்டி மற்றும் நடனப் போட்டி
        - ஆக்கத்தினை வீடியோ வடிவில் எமக்கு முன்வைக்க வேண்டும்.
        - போட்டி விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அமைய முன்வைக்கப்படும் ஆக்கத்தின் வீடியோ காட்சி, முறையாக பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்துடன் ("இணைப்பு 2") 071 600 7778 எனும் தொலைபேசி இலக்கத்திற்கு வாட்ஸ்ஆப் (WhatsApp) ஊடாக அனுப்புதல் வேண்டும்.

- போட்டியாளர் ஒன்றுக்கு மேற்பட்ட போட்டிகளில் பங்குபற்றுவாராயின், ஒவ்வொரு போட்டிக்காகவும் தனித்தனியாக விண்ணப்பப்படிவங்களை குறிப்பிட்ட ஆக்கங்களுடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

- பாடல் மற்றும் நடன போட்டிகளுக்கான ஆக்கங்களை வீடியோ காட்சிகளாகப் பதிவுசெய்து அனுப்பும் போது பின்வரும் அறிவுறுத்தல்களை பின்பற்றுதல் வேண்டும்.
    - எந்தவொரு கையடக்கத் தொலைபேசி அல்லது ஒளிப்பதிவுக் கருவியை ஒளிப்பதிவு செய்வதற்காகப் பயன்படுத்திக் கொள்ள முடியும்.
    - பாடல் ஆக்கமானது நிலையான வடிவத்திலும், நடன ஆக்கமானது கிடையான வடிவத்திலும் பதிவு செயயப்பட வேண்டும்.
    - வீடியோவினது ஒலி மற்றும் காட்சிகள் தெளிவாகக் காணக்கூடிய வகையில் இருத்தல் வேண்டும்.
    - வீடியோ காட்சியானது **ஒரே காட்சிப் பின்னணியில், இடைநிறுத்தப்படாமல்** பதிவு செய்யப்பட வேண்டும்.
    - பகுதி பகுதியாகப் பதிவு செய்யப்பட்ட காட்சிகளை பின்னர் தொகுப்பாக்கி வீடியோ தயாரிப்பது **செய்யப்படலாகாது**.
    - வீடியோவினது ஒலி மற்றும் காட்சிகள், கணினி தொழில்நுட்பம் அல்லது வேறு ஏதேனும் தொழில்நுட்பம் அல்லது நுட்பங்களைப் பயன்படுத்தி மாற்றங்கள் செய்தல் அல்லது எடிட் செய்தல் **செய்யப்படலாகாது**
    - பாடசாலைக் கலாசாரத்திற்குப் பொருத்தமான வகையில் ஆடை அணிகளைப் பயன்படுத்தி வீடியோவிற்குத் தோற்ற வேண்டும்.

- சகல ஆக்கங்களும் 2023 மார்ச் 15ஆம் திகதிக்கு முன்னர் ஹற்றன் நஷனல் வங்கிக்கு அனுப்பப்பட வேண்டும்.

- ஒவ்வொரு போட்டிப் பிரிவுகளுக்கும் பொருத்தமான வகையில் கல்வியமைச்சின் பாடசாலை செயற்பாட்டுக் கிளையின் அல்லது அழகியற் கல்விக் கிளையின் அல்லது தேசிய மொழிகள் மற்றும் மானுடவியல் கிளையின் அல்லது ஆங்கிலம் மற்றும் வெளிநாட்டு மொழிகள் கிளையின் தலைமையிலான நடுவர் குழாம் ஒன்றினால் ஆக்கங்கள் மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்பட்டு வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்படும். இந் நடுவர் குழாத்திற்கு ஹற்றன் நஷனல் வங்கி, தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு, மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு, இலங்கை வெளிநாட்டு சேவை செயற்பாட்டுப் பிரிவு, SLT மொபிடெல் மற்றும் HNB காப்புறுதி நிறுவனத்தினாலும் வளவாளர் உதவிகள் பெற்றுத்தரப்படும்.

- தெரிவுசெய்யப்படும் வெற்றியாளர்களின் ஆள் அடையாளம் மற்றும் அவர்களது தாய் அல்லது தந்தை அல்லது தாய் மற்றும் தந்தை ஆகிய இருவரும் வெளிநாடுகளில் சேவை புரிந்துள்ளமை தொடர்பாக உறுதிப்படுத்திக் கொண்டதன் பின்னர் வெற்றியாளர்கள் அறிவிக்கப்படுவர்.

- இப் போட்டி பற்றிய மேலதிக விபரங்களுக்கு, www.hnb.lk இணையதளத்தைப் பார்க்கவும். மேலும், 011 2 462 462 என்ற இலக்கத்தினூடாக எங்கள் வாடிக்கையாளர் சேவை மையத்தை அல்லது உங்கள் பாடசாலையின் அருகாமயில் உள்ள ஹற்றன் நஷனல் வங்கிக் கிளை தொடர்புகொள்ளவும்.

- ஒவ்வொரு போட்டிப் பிரிவிற்கும் விசேட போட்டி அறிவுறுத்தல்கள், போட்டி விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் பின்வருமாறு.

**போட்டி விதிமுறைகள் மற்றும் அறிவுறுத்தல்கள் - சித்திரப் போட்டி**

- ஆக்கம், வழங்கப்பட்டுள்ள கருவிற்கு அமைவானதாக இருத்தல் வேண்டும்.
- மதவாதம் அல்லது இனவாத ரீதியில் அல்லாத ஆக்கங்களாக அமைந்திருத்தல்.
- எந்வொரு ஊடகத்தையும் பயன்படுத்த முடியும். (பெஸ்டல், எண்ணெய் வர்ணம், நீர் வர்ணம் போன்ற எந்தவொரு ஊடகம்)
- ஆக்கம், வெளிப்பாட்டுச் சித்திரமாக இருத்தல் வேண்டும்.
- 18 ஒ 14 அங்குலம் அளவுள்ள தாளினைப் பயன்படுத்த முடியும்.

| வயது மட்டக் குழுக்கள் | கருப்பொருள் |
|---|---|
| முன்பள்ளி மற்றும் 5 வயதிற்குக் கீழ் | தாம் விரும்பிய வகையில் பொருத்தமான கருப்பொருளின் கீழ் சித்திரம் வரைதல் வேண்டும். |
| தரம் 1 மற்றும் 2 | பெற்றோரின் குணம் அல்லது சூழலை கருப்பொருளாகக் கொண்ட சித்திர ஆக்கம் |
| தரம் 3 தொடக்கம் 5 வரை | |
| தரம் 6 தொடக்கம் 8 வரை | வெளிநாட்டில் சேவை புரியும் தனது தாய்/ தந்தை, நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கு பங்களிப்புச் செய்யும் வகையினைக் காட்டும் சித்திரம் அல்லது வெளிநாட்டில் சேவை புரியும் தனது தாய்/ தந்தை, தனது கல்வி மற்றும் எதிகாலத்திற்கு பலமாக இருப்பதைக் காட்டும் வகையிலான சித்திரம் |
| தரம் 9 தொடக்கம் 11 வரை | |
| தரம் 12 மற்றும் 13 | |

**புள்ளி வழங்கும் நியதிகள்**

- தலைப்பிற்குப் பொருத்தமான சூழ்நிலையையும் சூழலையும் காட்டுதல்.
- வெளியில் உருவங்களை வரைந்துள்ள விதம்
- பாணிக்குரிய கோட்பாடுகளின் பயன்பாடு
- ஊடகங்கள் மற்றும் நுட்பமுறைகளைப் பயன்படுத்தும் திறன்
- பாவ வெளிப்பாடும் சிறப்பான முழு நிறைவும்

**<u>போட்டி விதிமுறைகள் மற்றும் அறிவுறுத்தல்கள் - பாடல் போட்டி</u>**

- இப்போட்டிக்கு கீழே தரப்பட்டுள்ள வயது மட்டக்குழுவின் கீழ் பிள்ளைகளுக்குப் பொருத்தமான பாடல் ஒன்றினை (தனியாக) பாடி முன்வைப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.
- பாடலுக்காக, பிரசித்திப் பெற்ற ஒரு பாடலை மாத்திரம் தெரிவு செய்துகொள்ள முடியும். (சுய ஆக்கத்தினை முன்வைக்க முடியாது)
- பின்வரும் வயது மட்டக்குழுவின் கீழ் வெவ்வேறாகப் போட்டிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன் அதன்கீழ் வழங்கப்பட்டுள்ள கருப்பொருளுக்கு அமைவாக பாடலினைத் தெரிவு செய்ய முடியும்.
- ஆண் - பெண் என்ற வேறுபாடுகள் கிடையாது
- மொழி அடிப்படையில் வேறுபடுத்தப்படாது
- மத வாதம் அல்லது இனவாத கருத்துக்கள் வெளிப்படாத வகையில் பாடல்கள் தெரிவுசெய்யப்பட வேண்டும்.
- பின்னணி இசை மற்றும் துணை இசைக்காக நேரடி இசை அல்லது பதிவு செய்யப்பட்ட இசைக்கு அமைவாகப் பாடல் பாடி முன்வைக்க முடியும்.
- வீடியோவை தயார் செய்யும் போது இச் சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வீடியோ பற்றிய பொது அறிவுறுத்தல்களுக்கு அமைவாக இருத்தல் வேண்டும்.

| வயது மட்டக் குழுக்கள் | கருப்பொருள் |
|---|---|
| முன்பள்ளி மற்றும் 5 வயதிற்குக் கீழ் | பிள்ளைகளுக்குப் பொருத்தமான கருப்பொருளின் கீழ் பிரசித்திப் பெற்ற சிறுவர் பாடல் |
| தரம் 1 மற்றும் 2 | பிள்ளைகளுக்குப் பொருத்தமான கருப்பொருளின் கீழ் பிரசித்திப் பெற்ற சிறுவர் பாடல் |
| தரம் 3 தொடக்கம் 5 வரை | நற் பழக்கவழக்கங்களைக் கருப்பொருளாகக் கொண்டு பிர பிரசித்திப் பெற்ற சிறுவர் பாடல் |
| தரம் 6 தொடக்கம் 8 வரை | இயற்கை அல்லது சூழலைக் கருப்பொருளாகக் கொண்டு பிர பிரசித்திப் பெற்ற மெல்லிசைப் பாடல் |
| தரம் 9 தொடக்கம் 11 வரை | பெற்றோரின் குணநலன்களைக் கருப்பொருளாகக் கொண்டு பிர பிரசித்திப் பெற்ற மெல்லிசைப் பாடல் |
| தரம் 12 மற்றும் 13 | நாட்டுப்பற்றினை கருப்பொருளாகக் கொண்டு பிர பிரசித்திப் பெற்ற மெல்லிசைப் பாடல் |

**<u>போட்டி விதிமுறைகள் மற்றும் அறிவுறுத்தல்கள் - நடனப் போட்டி</u>**

- ஆண் - பெண் என்ற வேறுபாடுகள் கிடையாது
- மொழி அடிப்படையில் வேறுபடுத்தப்படாது
- சகல நடனப் போட்டிகளும் தனிப் போட்டிகளாகும்.
- வழங்கப்பட்டுள்ள கருப்பொருளுக்கு அமைவாக ஆக்கம் அமைதல் வேண்டும்.
- பாடசாலை கலாசாரத்திற்குப் பொருத்தமான வகையில் ஆடை அணிகலன்கள்
- வீடியோவை தயார் செய்யும் போது இச் சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வீடியோ பற்றிய பொது அறிவுறுத்தல்களுக்கு அமைவாக இருத்தல் வேண்டும்.
- மத வாதம் அல்லது இனவாத கருத்துக்கள் வெளிப்படாத வகையில் அமைக்கப்பட்ட ஆக்கமாக அமைந்திருத்தல் வேண்டும்.
- வழங்கப்பட்டுள்ள கருப்பொருளுக்கு பொருத்தமான நேரடிப் வாய்ப்பாட்டு, நேரடி இசை வழங்கல் அல்லது பதிவு செய்யப்பட்ட ஒலிநாடா மூலமான பின்னணி இசையைப் பயன்படுத்த முடியும்.
- முன்பள்ளி மற்றும் 5 வயதிற்குக் கீழ்ப்பட்ட குழு நடன ஆக்கத்துக்கான நேரம் 3 நிமிடங்களை உச்ச அளவில் கொண்டிருக்க வேண்டியதுடன் ஏனைய வயதுக் குழவினருக்கான நடன ஆக்கத்துக்கான நேரம் 4 நிமிடங்களை உச்ச அளவாகக் கொண்டிருத்தல் வேண்டும்.
- வழங்கப்பட்டுள்ள உச்சளவிலான காலத்திற்குள்ளேயே நடனத்தை முன்வைக்க வேண்டும்.

| வயது மட்டக் குழுக்கள் | கருப்பொருள் |
|---|---|
| முன்பள்ளி மற்றும் 5 வயதிற்குக் கீழ் | சிறுவர் நடனம் (பொருத்தமான பாடலொன்றினைத் தெரிவு செய்து, அதன் அர்த்தம் வெளிப்படும் வகையில் முன்வைக்க வேண்டும்.) |
| தரம் 1 மற்றும் 2 | பொருத்தமான சிறுவர் பாடலொன்றினைத் தெரிவு செய்து, அதன் அர்த்தம் வெளிப்படும் வகையில் நடன ஆக்கம் செய்தல் வேண்டும். |
| தரம் 3 தொடக்கம் 5 வரை | ஆசிரியர் அல்லது ஆசிரியை பற்றி கூறப்படும் பொருத்தமான சிறுவர் பாடலொன்றுக்கு நடன ஆக்கம் செய்தல் வேண்டும். |
| தரம் 6 தொடக்கம் 8 வரை | பெற்றோரைக் கருப்பொருளாகக் கொண்ட நடன ஆக்கம் |
| தரம் 9 தொடக்கம் 11 வரை | நாட்டுப்பற்று வெளிப்படும் வகையிலான நட ஆக்கம். பொருத்தமான பாடலொன்றினைத் தெரிவுசெய்து கொள்ள முடியும். |
| தரம் 12 மற்றும் 13 | எந்தவொரு நடன வகை அல்லது வகைகளைப் பயன்படுத்திய திறன்மிக்க நடனம் |

**புள்ளி வழங்கும் நியதிகள்**

- கருப்பொருளுக்குப் பொருத்தமாக இருத்தல்
- நடனத் திறன்
- பொருத்தமான நடன அசைவுப் பயன்பாடு
- நடன பாணி
- பாடல், இசை, நடன கலவை

**<u>போட்டி விதிமுறைகள் மற்றும் அறிவுறுத்தல்கள் - கட்டுரைப் போட்டி</u>**

**சிங்களம் மற்றும் தமிழ் மொழிக்கானது**

| வயது மட்டக் குழுக்கள் | சொற்களின் அளவு | கருப்பொருள் / தலைப்பு |
|---|---|---|
| தரம் 3 தொடக்கம் 5 வரை | 25 – 30 சொற்களுக்கிடையில் (தலைப்புக்குப் பொருத்தமான வகையிலான 5 அர்த்தமுள்ள வாக்கியங்கள்) | • எனது அம்மா<br>• எனது அப்பா<br>• எனது நாடு |
| தரம் 6 தொடக்கம் 8 வரை | 200 – 300 சொற்களுக்கிடையில் | • உலகில் சிறந்த நாடு இலங்கை<br>• வெளிநாட்டில் கழுமையாக உழைத்து தாய் நாட்டினை உயர்த்தும் எனது அம்மா/ எனது அப்பா<br>• வெளிநாட்டில் உழைக்கும் எனது அம்மா/ எனது அப்பாவினது எதிர்கால எதிர்ப்பார்ப்பு நான் ஆகும். |
| தரம் 9 தொடக்கம் 11 வரை | 300 - 400 சொற்களுக்குக் குறையாமல் | • வெளிநாட்டில் கழுமையாக உழைத்து தாய் நாட்டினை உயர்த்தும் எனது அம்மா/ எனது அப்பா<br>• வெளிநாட்டில் உழைக்கும் எனது அம்மா/ எனது அப்பாவினது எதிர்கால எதிர்ப்பார்ப்பு நான் ஆகும். |
| தரம் 12 மற்றும் 13 | 450 - 500 சொற்களுக்குக் குறையாமல் | • அந்நியச் செலாவணி உருவாக்கத்திற்கான புதுமையான வழிகளைக் கண்டுபிடிப்போம்.<br>• நாட்டை வெற்றிகொள்ள அந்நிய செலாவணியை சிறந்த முறையில் முகாமை செய்வோம். |

**புள்ளி வழங்கும் புள்ளித்திட்டம்**

| 3 தொடக்கம் 5 வரையான வகுப்புக்களைக் கொண்ட குழுக்களுக்கு | ஏனைய குழுக்களுக்கானது | வழங்கப்படும் புள்ளி அளவு |
|---|---|---|
| தலைப்புக்குப் பொருத்தமான கருத்து வெளிப்பாடு | தலைப்புக்குப் பொருத்தமான கருத்து வெளிப்பாடு (உள்ளடக்கம்) | 15 |
| முறையான இலக்கணப் பயன்பாடு | மொழிக்கட்டமைப்பைப் பேணுதல் (வாக்கிய அமைப்பு மற்றும் சொற் பயன்பாடு) | 15 |
| எழுத்துபிழையின்மை மற்றும் சொல் இணைப்பு | நுட்பங்கள் (சொற்பாகுபாடு, பந்தி பிரித்தல், நிறுத்தக்குறிகள் மற்றும் கையெழுத்து | 10 |
| சரியான எழுத்து வடிவம் | படைப்பாற்றல் மற்றும் முழுமை | 10 |
| **மொத்த புள்ளிகள்** | | **50** |

**ஆங்கில மொழிக்கானது**

| வயது மட்டக் குழுக்கள் | சொற்களின் அளவு | கருப்பொருள் / தலைப்பு |
|---|---|---|
| தரம் 3 தொடக்கம் 5 வரை | 25 – 30 சொற்களுக்கிடையில் (தலைப்புக்குப் பொருத்தமான வகையிலான 5 அர்த்தமுள்ள வாக்கியங்கள்) | • My mother<br>• My father<br>• My country |
| தரம் 6 தொடக்கம் 8 வரை | 150 - 200 சொற்களுக்கிடையில் | • Sri Lanka is the greatest country in the world<br>• My father/ My mother working hard abroad to blossom our mother land<br>• I am the future pride of my parents who are working hard obroad |
| தரம் 9 தொடக்கம் 11 வரை | 200 - 250 சொற்களுக்கிடையில் | • My father/ My mother working hard abroad to blossom our mother land<br>• I am the future pride of my father/ my mother who work hard for the country |
| தரம் 12 மற்றும் 13 | 250 – 300 சொற்களுக்கிடையில் | • Let's find innovative avenues of Foreign Exchange generation<br>• Better mamagement of Foreign Exchange for a better Sri Lanka |

**புள்ளி வழங்கும் புள்ளித்திட்டம்**

| நியதிகள் | வழங்கப்படும் புள்ளி அளவு |
|---|---|
| படைப்பாற்றல் / சுய படைப்பு | 40 |
| ஒழுங்கமைப்பு / கருத்து இணைப்பு | 30 |
| இலக்கண அமைப்பு | 20 |
| தலைப்புப் பொருத்தம் | 10 |
| **மொத்த புள்ளிகள்** | **100** |